# LANGUAGE IN INDIA

**Strength for Today and Bright Hope for Tomorrow**

**Volume 7 : 5 May 2007**



Managing Editor: M. S. Thirumalai, Ph.D.
Editors: B. Mallikarjun, Ph.D.
Sam Mohanlal, Ph.D.
B. A. Sharada, Ph.D.
A. R. Fatihi, Ph.D.
Lakhan Gusain, Ph.D.
K. Karunakaran, Ph.D.
Jennifer Marie Bayer, Ph.D.


# N. PALANIVELU – A PIONEER AMONG THE TAMIL WRITERS OF MALAYSIA AND SINGAPORE


**SUNDARI BALASUBRAMANIAM**



தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் சார்பில் அவர் எழுதி ,இயக்கி, நடித்த மேடை நாடகங்கள், முப்பதுகளில் பரபரப்பை ஏற்படுத்தின. அவரின் எண்ணற்ற கவிதைகளும் நாடகங்களும் சமுதாய விழிப்புணர்வு கொண்டவை.

# சிங்கப்பூர் இலக்கிய முன்னோடி திரு ந. பழநிவேலு

By Sundari Balasubramaniam,
Reference Librarian, Lee Kong Chian Reference Library

தமிழிலக்கியம் என்பது தமிழ் நாட்டுக்கு மட்டும் என்ற நிலை மாறி இன்று உலகெங்கும் புலம் பெயர்ந்த தமிழர்களால் மட்டுமன்றி பல வெளிநாட்டவர்களாலும் செழுமைபடுத்தப் படுகிறது. குறிப்பாக இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் வாழும் எண்ணற்ற தமிழர்கள் இன்றும் சிறந்த படைப்புகளை வெளியிட்டு தமிழை உன்னத நிலைக்குக் கொண்டு செல்கின்றனர். இக்கட்டுரையில் சிங்கப்பூரில் தமிழ் வளர்த்த இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான திரு ந. பழநிவேலு அவர்களை பற்றிப் பார்ப்போம்.

## சிங்கப்பூரின் தமிழ் இலக்கிய வளர்ச்சி:

சிங்கப்பூர் கலாசாரப் பின்னணியில் எழுதப்பட்ட சிங்கப்பூரின் ஆரம்ப கால இலக்கியங்கள் கவிதை வடிவிலே இருந்தன. 1887 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சி. ந. சதாசிவ பண்டிதர் அவர்களால் உருவாக்கப்பட்ட சிங்கை நகரந்தாதி, சித்திரகவிகள் ஆகிய இரண்டும் சிங்கப்பூர் சுப்பிரமணிய சுவாமிமேல் பாடப்பெற்றவை. இந்நூலே சிங்கைத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி நூலாகத் திகழ்கிறது. அடுத்து நா. வ. ரங்கசாமி தாசனின் அதிவினோத குதிரைப் பந்தய லாவணி (1893), க. வேலுப்பிள்ளையின் சிங்கை முருகேசர் பதிகம் (1893), முகமது அப்துல் காதரின் கீர்த்தனை திரட்டு (1896) ஆகிய நூல்களும் சிங்கைத் தமிழ் இலக்கிய முன்னோடி நூல்களாகக் கருதப்படுகின்றன. இதில் அதிவினோத குதிரைப் பந்தய லாவணி, தமிழ் மூதாதையர் எவ்வாறு தஞ்சை மாவட்டப் பகுதியிலிருந்து கப்பலில் சிங்கப்பூர் வந்து குடியேறித் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர் என்பதைச் சித்தரிக்கிறது. மற்ற நூல்கள் யாவும் பக்தி நூல்களே.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு 1935லிருந்து சிங்கைத் தமிழ் இலக்கியத்தில் மாற்றம் ஏற்படலாயிற்று. சமய இலக்கியங்கள் குறைந்து சமுதாயச் சிந்தனையுள்ள இலக்கியங்கள் தோன்றின. தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் தமிழ் முரசு நாளிதழ் மற்றும் சீர்திருத்தம் என்ற மாத இதழ் வெளிவரத் துவங்கியதும் சமூக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கதைகள், நாவல்கள், நாடகங்கள் என இலக்கியம் வளர்ச்சி கண்டது. சிங்கப்பூரின் தமிழ்க் கவிதை எழுச்சிக்கு அடித்தளம் அமைத்தவர்களாகிய திரு ந. பழநிவேலன், சிங்கை முகிலன் ஆகியோரின் படைப்புகள் சீர்திருத்த உணர்வோடும் துடிப்போடும் விளங்கின. சாதிமதக் கொடுமை, கிழமணக் கொடுமை, ஈழத் தமிழ் அதிகாரிகளின் அதிகாரத்திற்கு உட்பட்ட தென்னிந்தியத் தமிழர்களின் அவல வாழ்க்கை, சாதி ஒழிப்பு, கைம்பெண் மணம், பொருந்தா மணம், மத ஊழல் எதிர்ப்பு, பிராமண எதிர்ப்பு, மதச் சீர்திருத்தம், இதிகாச எதிர்ப்பு முதலிய பல சீர்திருத்தக் கருத்துக்கள் திரு ந. பழநிவேலுவின் படைப்புகளில் மிளிர்ந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நாளிதலாகத் தொடங்கப்பட்ட மலாயா நண்பன், தமிழ் முரசு பல எழுத்தாளர்களையும் பத்திரிக்கையாளர்களையும் உருவாக்கியது.

சிங்கப்பூர் குடியரசான பின்பு மரபுக் கவிதைகள், குழந்தைப் பாடல்கள், புதுக்கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் என இலக்கியம் வளரத்தொடங்கியது. இவ்விலக்கிய வளர்ச்சியின் முன்னோடிகளாக ந. பழநிவேலு, சிங்கை முகிலன், சே. வெ. சண்முகம், கா. பெருமாள், நா. கோவிந்தசாமி, பி. கிருஷ்ணன் ஆகியோர் கருதப்படுகின்றனர். இவர்களில் மூத்தவரான திரு ந. பழநிவேலு அவர்களைப் பற்றி இங்கு பார்ப்போம்.

## அறிமுகச் சுருக்கம்

சிங்கை, மலேசியாவின் முதுபெரும் பாவலர்களில் ஒருவராகிய திரு. ந. பழநிவேலு அவர்கள் கவிதை, சிறுகதை, கட்டுரை, மேடை நாடகம், வானொலி, தொலைகாட்சி நாடகம் எனப் பல துறைகளிலும் கைவந்தவர். தமிழ் முரசு நாளிதழ், சிங்கப்பூர் தமிழர் கழகத்தின் வெளியீடாகிய சீர்திருத்தம், திராவிடமுரசு ஆகிய இதழ்களில் 1936க்கும் 1964க்கும் இடைப்பட்ட காலத்தில் இவர்

பல சிறுகதைகளைப் படைத்துள்ளார். தம் வாழ்நாளின் இறுதிவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் எழுத்துப்பணியைத் தொடர்ந்தார். வானொலியில் தயாரிப்பாளராகப் பணியாற்றும் போது பல நாடகங்கள் எழுதியுள்ளார். இவர் நாடகங்களில் சமுதாயம், குடும்பம், காதல், இலக்கியம், ஆகிய கருத்துக்களே மேலோங்கி நின்றன. தமிழிலக்கிய வளத்திற்கு மலேசிய, சிங்கப்பூர்த் தமிழ்ப்படைப்பாளிகள் பலர் பெரும் பங்காற்றியுள்ளனர். இப்பணியில் திரு ந. பழநிவேலு அவர்களின் சிறந்த படைப்புகளும் அடங்கும்.



திரு ந.பழனிவேலு
அவர்களும் மனைவி
சம்பூர்ணம் அம்மையாரும்

திரு ந பழநிவேலு அவர்கள் 1908 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சிக்கல் என்ற ஊரில் பிறந்தார். நடேசன், ஜானகி அம்மாள் ஆகியோரின் ஒரே மகனான திரு பழநிவேலு அவர்கள், தமது 21வது வயதில் மலாயா சென்று சில காலம் அங்கிருந்த பிறகு 1930 இல் சிங்கப்பூரில் குடியேறினார். 1938 இல் சம்பூர்ணம் அம்மையார் அவர்களைத் திருமணம் முடித்து நான்கு ஆண்மக்களுக்கும் மூன்று பெண்மக்களுக்கும் தந்தையானார்.

## எழுத்துத்துறையில் ஆற்றிய பங்கு:

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பெற்ற தமிழவேள் திரு ந பழநிவேலு அவர்களுக்கு கோ சாரங்கபாணியின் நட்பு, அவர்தம் எழுத்துலக வாழ்க்கைக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தமிழர் சீர்திருத்தச்சங்கத்தின் உறுப்பினரான இவரின் தொடக்கக் கால நாடகங்களும், சிறுகதைகளும், கவிதைகளும் சீர்திருத்தக் கொள்கையைப் பரப்புவனவாக இருந்தன. தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் சார்பில் அவர் எழுதி, இயக்கி, நடித்த மேடை நாடகங்கள், முப்பதுகளில் பரபரப்பை ஏற்படுத்தின. அவரின் எண்ணற்ற கவிதைகளும் நாடகங்களும் சமுதாய விழிப்புணர்வு கொண்டவை. எளிய நடையில் நாற்பதுகளிலும், ஐம்பதுகளிலும் வழங்கிய மலாய் கலந்த பேச்சுத் தமிழில் சமுதாயச் சிந்தனையையும், மனித நேயத்தையும், சிறந்த ஒழுக்கங்களையும் தம் படைப்புகள் மூலம் வெளிப்படுத்தினார்.

திரு ந. பழநிவேலு அவர்கள் கவிஞர், கட்டுரையாளர், சிறுகதை எழுத்தாளர், மேடை, வானொலி, தொலைகாட்சி நாடகங்களின் எழுத்தாளர், பாடலாசிரியர், நாடக இயக்குநர், நடிகர் எனப் பல துறைகளிலும் ஆற்றல் மிகுந்த சிறந்த கலைஞராவார்.

1935 லிருந்து 1960 வரை ந. பழநிவேலு அவர்கள்



நாடக நடிகராக
இருவேறு நாடகங்களில்
கவிஞர்

50 கதைகள் எழுதியுள்ளார். கற்பனை, திருப்பம், நாடக பாணி உரையாடல் முதலியவற்றை இவர் கதைகளில் காணலாம். இவரது தொடக்க காலக் கதைகள் தமிழர் சீர்திருத்தம் பற்றியவை ஆகும். 'செக்கு மாடு', 'நத்தை' கதைகள் அர்த்தமற்ற வழிவழி உபசரிப்புகளையும், சம்பிரதாயங்களையும்




கண்டிக்கின்றன. சுகுணசுந்தரம் அல்லது ஜாதி பேதக் கொடுமை'(1936) என கதைகளுக்கு இரட்டைப் பெயர் சூட்டும் முறையும், எதிர்த்த வீட்டுக்காரர் (1953) என்ற கதையில் ஜப்பானியர் ஆட்சிக் குறிப்பு பற்றியும், பெயர் சூட்டல் (1948) கதையில் டிராம் வண்டியில் பர்சு பறிபோதல் என மலாய் கலந்த தமிழில் வசனங்கள் எழுதியும் அக்கால வழக்கத்திற்கு நம்மை இட்டுச் செல்கின்றார். இவரது 'காதற்கிளியும் தியாகக் குயிலும்' என்னும் சிறுகதைத் தொகுப்பு (1977) இல் வெளிவந்தது.

**கால வரைகோடு**

1908 - தமிழகத்தின் தஞ்சை மாவட்டம் சிக்கலில் பிறந்தார்

1930 - சிங்கப்பூரில் குடியேறினார்

1931 - "வலிமை" எனும் முதல் கவிதை "நவநீதம்" இதழில் வெளிவந்தது.

1936 - "கௌரி சங்கர் அல்லது கிழமணக் கொடுமை" எனும் நாடகம் எழுதி அரங்கேற்றப்பட்டது

1938 - சம்பூர்ணம் அம்மையார் அவர்களைத் திருமணம் செய்தார்.

1947 - தமிழ் முரசு வெளியீடாக "கவிதை மலர்கள்" முதற் பதிப்பு.

1948 - மலாயா வானொலியில் ஒலிபரப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் சேர்ந்தார்.

1975 - "கவிதை மலர்கள்" இரண்டாம் பதிப்பு.

1976 - "காதற்கிளியும் தியாகக் குயிலும்" சிறுகதைத் தொகுப்பு.

1978 - "நாடக சிகாமணி" விருது சிங்கப்பூர் பாஸ்கர் நாட்டியப்பள்ளி வழங்கியது.

1981 - "கலியின் நலிவு" பாவியல் நாடக நூல்.

1987 - "கலாசாரப் பதக்கம்"– சிங்கப்பூர் சமூக வளர்ச்சித் துணை அமைச்சு வழங்கியது.

1987 - "கலா ரத்னா"– சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழகம் வழங்கியது

1990 - "பாப்பா பாடல்கள்" நூல்.

1993 - 31ஆண்டுகள் கழித்து பணி ஓய்வு பெற்றார்.

1997 - "தமிழவேள்" விருது சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தால் அளிக்கப்பட்டது.

2000 - இயற்கை எய்தினார்.

**வெளியீடுகள்**

1931 - "வலிமை" என்னும் முதல் கவிதை நவநீதம் இதழில் வெளிவந்தது.

1947 - "கவிதை மலர்கள்" முதல் பதிப்பு.

1975 - "கவிதை மலர்கள்" இரண்டாம் பதிப்பு.

1976 - "காதற்கிளியும் தியாகக் குயிலும்" சிறுகதைத் தொகுப்பு.

1981 - "கலியின் நலிவு" பாவியல் நாடக நூல்.

1990 - "பாப்பா பாடல்கள்" சிறுவர்களுக்குரிய நூல்.

1997 - "கவிஞர் ந.பழநிவேலு படைப்புக் களஞ்சியம்" முதல் பதிப்பு.

1999 - "கவிஞர் ந.பழநிவேலு படைப்புக் களஞ்சியம்" இரண்டாம் பதிப்பு.

**விருதுகள்**

**வருடம் விருது**

1978 "நாடக சிகாமணி"–சிங்கப்பூர் பாஸ்கர் நாட்டியப்பள்ளி வழங்கிய விருது.

1987 கலாசாரப் பதக்கம்"– சிங்கப்பூர் சமூக வளர்ச்சித் துணை அமைச்சு வழங்கியது.

1987 "கலா ரத்னா"– சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழகம் வழங்கியது.

1997 "தமிழவேள்" – சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் வழங்கியது.



அமைச்சர் திரு வாங் கான் செங் கவிஞருக்கு "கலாச்சாரப் பதக்கம்' வழங்குகிறார்.



சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழகத்தின் 'கலாரத்னா' விருது பெறுகிறார் கவிஞர்

**சிறுகதைகள்**

1. அறிவாற்றல்
2. இரக்கம் வென்றது
3. கானல் நீர்
4. தற்கொலை
5. பத்திராதிபன்
6. புலிவேட்டை
7. வண்டின் ரீங்காரம்
8. என் கதாநாயகி
9. கடிதம் கிடைத்தது
10. சந்தேகம்
11. திட்டம்
12. நத்தைகள்
13. நினைத்ததும் நடந்ததும்
14. பிரிவு
15. மத்தாப்புச் சுந்தரி
16. வாடகை அறை
17. விழிப்பு
18. அப்பாவும் மகனும்
19. இதுதான் வாழ்க்கை
20. காதல் உள்ளம்
21. காதற்கிளியும் தியாகக் குயிலும்
22. காயும் கனியும்
23. குழந்தைக் காதலர்
24. செல்லாத நோட்டு

**கவிதை**

25. இறைப்பற்று
26. இயற்கை
27. சமுதாயம்
28. சமுதாயச் சிற்பிகள்
29. உறவுகள்
30. நாடு
31. வாழ்வியல்
32. பாப்பாவுக்கு

**கட்டுரை**

**வெற்றியின் இரகசியம்**

**உரையாடல்**

1. செந்தமிழ் கொடுந்தமிழ் பழமொழிகள்
2. பேச்சுவழக்கு, கவிதை
3. இலக்கியம்
4. மரபு
5. உள்ளுறை
6. அந்தாதி
7. சீட்டுக்கவி
8. அவலச் சுவை
9. சந்தர்ப்பப் பாடல்கள்
10. சர்ச்சைக்குரிய செய்யுள்
11. உரைநடை நூல்கள்
12. ஐங்குறுநூறு
13. பதிற்றுப்பத்து
14. பொருநராற்றுப்படை
15. குறிஞ்சிப்பாட்டு
16. முல்லைப்பாட்டு
17. குறிஞ்சிக்கலி
18. முல்லைக்கலி
19. மருதக்கலி, நெய்தற்கலி
20. நாலடியார்
21. நானாற்பது: இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது
22. இருதமிழ் நூல்கள்
23. சூளாமணி
24. நீலகேசி
25. நளவெண்பா
26. தேம்பாவணி
27. வஞ்சிக்காண்டம்
28. முத்தொள்ளாயிரம் (1)
29. முத்தொள்ளாயிரம் (2)
30. தஞ்சைவாணன் கோவை
31. கபிலரகவல்
32. கலிங்கத்துப்பரணி (1)
33. கலிங்கத்துப்பரணி (2)
34. நந்திக்கலம்பகம்
35. திருப்பாவை, திருவெம்பாவை
36. திருக்கோவையார்
37. திருவாய்மொழி
38. குட்டித் திருவாசகம்
39. ஐவேல் அசதிக்கோவை
40. புலவர் வரலாறு
41. முற்கால, தற்காலப் புலவர்கள்
42. வையார்
43. கல்லாடனார்
44. கூவல் மைந்தன்
45. ஆய்மன்னன்; பெருஞ்சித்திரனார்
46. கணியன் பூங்குன்றனார்
47. சோழன் கரிகாலன்
48. திருமூலர்
49. புத்தரும் திருமூலரும்
50. செம்பியன் மாதேவியார்
51. கம்பசித்திரம்
52. ஒட்டக்கூத்தர்
53. பூரணலிங்கம் பிள்ளை
54. திரு வி.க.
55. சொல்லின் செல்வர்
56. நீலாம்பிகை அம்மையார்
57. இசைத்தமிழ்ச் செல்வர்
58. கா.சுப்பிரமணிய பிள்ளை
59. சடையப்ப வள்ளல்
60. நம்பியாண்டார் நம்பி
61. இராமானுஜர்
62. குருவைத் தெய்வமாய்க் கொண்டாடியவர்
63. விபுலானந்த அடிகள்
64. இராமலிங்க அடிகள்
65. அழகிய சொக்கநாதர்
66. மாம்பழக் கவிச்சிங்க நாவலர்
67. கடவுள்
68. பண்டைத்தமிழர் வாழ்க்கைமுறை
69. பண்டைத் தமிழர் சமய நெறி
70. நவராத்திரி
71. பழங்கால வரலாற்றுக் குறிப்புகள்; அத்திரி
72. நடுகல்
73. பறம்பு மலைப் போர்
74. முளிதயிர்
75. யானைப்போர்
76. பாம்புச் செடி
77. நகில் குறைத்தல்
78. கூத்து
79. ஜயத்தின் விளைவு
80. பத்தினிப் பெண்டிர்
81. மகளிர் பண்பு
82. கணவரோடு வாழ்வு
83. பத்தினித் தெய்வம்
84. குலக்கொடிகள்
85. கானல்வரி
86. மாடலன்
87. இலக்குமணன்
88. குருகுலம்
89. இலங்கை
90. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
91. கயவர்
92. நால்வர்
93. குற்றாலம்
94. சீக்கியமதம்
95. லியோ டால்ஸ்டாய்
96. தமிழிசை இயக்கம்

### நாடகங்கள்

**கவிதை நாடகம்:**

1. கடற்கரையிலே

**சமுதாய நாடகங்கள்:**

2. ஆயிரத்தில் ஒருத்தி
3. பாடம்
4. போகும் வழியில்
5. மிரட்டல் பணம்

**குடும்பம்**

6. இரகசியம்
7. எதிர்வீடு
8. ஒரே நாள்
9. கல்லில் நார்
10. சந்தேகம்
11. பட்டாசு
12. பாசப்போட்டி
13. மியா! மியா!
14. மாப்பிள்ளை விஜயம்
15. முரட்டு மாப்பிள்ளை
16. வசிய மருந்து

**இளைஞர்**

17. இரு நண்பர்கள்
18. உழைப்பின் உயர்வு
19. உறுதி
20. கடிதக்காதலி
21. காதல் நாடகம்
22. துணிந்தவர்க்கு!

**இலக்கியம்**

23. புலவரும் புரவலனும்
24. கயமனார்
25. பிசிராந்தையார்
26. பெருந்தலைச்சாத்தனார்
27. குமணன்
28. பொற்கைப் பாண்டியன்
29. அகமும் புறமும்
30. சாதனை
31. சோர்விலாள் பெண்
32. காளிதாசன்
33. குமரகுருபரர்
34. தாயுமான அடிகள்
35. மனோன்மணீயம்
36. யானைக்கும் அடி சறுக்கும்

**பா பயில் நாடகம்–சமுதாயம்**

37. கௌரிசங்கர் அல்லது கிழமணக்கொடுமை
38. சுகுணசுந்தரம் அல்லது சாதிபேதக் கொடுமை
39. நட்பு

**குடும்பம்**

40. ஏமாற்றம்
41. மயக்கமும் தெளிவும்

**காதல்**

42. கைக்கிளை
43. பாடும் மாப்பிள்ளை

**தத்துவம்**

44. இன்பம் எங்குள்ளது

**புராண இதிகாசம்**

45. வாலி
46. கும்பகர்ணன்
47. சைரந்திரி
48. பழிக்குப் பழி
49. ரிஷிய சிருங்கர்
50. கொடுத்தான் (பாரதம்)

**பா நடை நாடகம்**

51. கலியின் நலிவு
52. சாகுந்தலம்
53. கடல்

**ஆதாரக் குறிப்புகள்:**

- சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள் தொகுப்பு நூல்.
- சிங்கப்பூரில் தமிழும் தமிழிலக்கியமும் – ஆய்வரங்க மாநாட்டுக் கட்டுரைகள், 1977.
- கவிஞர் ந. பழநிவேலு படைப்புக் களஞ்சியம்.

## N PALANIVELU (1908 – 2000)

N Palanivelu was born in 1908 in the Tanjore district of Sikkal in Tamil Nadu. At the age of 21, he went to Malaya and then to Singapore in 1930. In 1938, he married Sampoornam and became the father of 4 sons and 3 daughters.

A novelist, playwright and poet, Palanivelu was an active writer for more than 50 years. From 1935 to 1960, Palanivelu wrote 50 stories. A turning point in Palanivelu's literary life came about when he befriended Thamizhavel Ko Sarangapani, the founder of Tamil Murasu. Sarangapani published many of Palanivelu's poems and stories in Tamil Murasu. Palanivelu's earlier works reflected the philosophies of the Tamil Reform Association, of which he was a member. He also staged plays with the themes of social reform.

Palanivelu's poems, short stories and plays were published in newspapers and magazines and broadcast over radio as well. His writings centered on the themes of community, family, love and literature. His first collection of poems, titled *Valimai*, was published in the magazine *Navaneetham* in 1931. In 1936, he wrote a comedy entitled *Kalyana Panthalil*. His first book of poems, *Kavithai Malargal* was published in 1947. Besides several other books, he also published *Kathal Kiliyum Thiyaga Kuyilum* (short stories) and *Kaliyin Nalivu* (a play).

Palanivelu received several awards in his lifetime. He was bestowed the title of "Naadaga Sigamani" (jewel of drama) by the Bhaskar's Dance Academy in 1978, the Cultural Medallion for Drama in 1986, "Kala Rethna" award by the Singapore Indian Fine Arts Society in 1987, and the "Tamizhavel" literary award by the Association of Singapore Tamil Writers in 1987.